செ.வெ.எண்-28 நாள்-18.07.2021

# அரியலூர் மாவட்டம்

# அரியலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் 12,365 மெ.டன் அளவுள்ள நெல் மூட்டைகள் பல்வேறு மாவட்ட நெல் சேமிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

அரியலூர் மாவட்டம், அரியலூர் இரயில் நிலையம், சாத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் நெல் சேமிப்பு நிலையங்களையும், பார்னச்சேரி, தேளூர் ஆகிய பகுதிகளில் புதிய நெல் சேமிப்பு நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல் மூட்டைகள் இரயில் மூலம் விருதுநகருக்கு அனுப்பும் பணிகளையும், சாத்தமங்கலம் தனியார் சர்க்கரை ஆலை வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகளை விரைந்து முடிக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். மேலும் புதிதாக அரியலூர் மாவட்டத்தில் 20,000 மெ.டன் சேமிப்பு நிலையம் அமைப்பதற்காக தேளூர் மற்றும் பார்பனச்சேரி உள்ளிட்ட இடங்களில் கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் வாழ்வு மேம்படும் வகையில் பல்வேறு வகையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் விவசாய தொழில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையிலும், விலைப்பொருட்களை சேமிப்பதற்காக அடிப்படை கட்டமைப்புகளை புதியதாக உருவாக்கி வருகின்றார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் சராசரியாக 50-70 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்படும். அதன்படி நடப்பு ஆண்டில் 10% கூடுதலாக தற்போது வரை 70 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல் மூட்டைகள் அரசு நெல் சேமிப்பு நிலையங்களிலும் மற்றும் திறந்த வெளி சேமிப்பு கிடங்குகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதன்படி கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லை மழை காலத்திற்கு முன்பாக நெல் சேமிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கடந்த ஒரு வாரத்தில் திருச்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2,000 மெ.டன்னில் 1,658 மெ.டன் நெல்லும், சிவகங்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2,000 மெ.டன்னில் 124 மெ.டன் நெல்லும், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தலா 2000 மெ.டன்னில் அனைத்து நெல்லும், விருதுநகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 மெ.டன்னில் முழுவதும், பெரம்பலூர் மார்க்கெட் கமிட்டிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,600 மெ.டன்னில் 787 மெ.டன் நெல்லும், கோத்தாரி சர்க்கரை ஆலையில் பாதுகாப்பாக வைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 4,000 மெ.டன்னில் 1,343 மெ.டன் நெல்லும், அயன் சுத்தமல்லி நெல் சேமிப்பு நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,228 மெ.டன் நெல் முழுவதுமாகவும், நெல் அறவை முகவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2,000மெ.டன்னில் 1,703 மெ.டன் நெல்லும், கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,000 மெ.டன் நெல்லில் 522 மெ.டன் நெல்லும் என மொத்தம் 18,828 மெ.டன் நெல்லில் 12,365 மெ.டன் நெல் கடந்த ஒரு வார காலத்தில் பாதுகாப்பாக பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள நெல் மூட்டைகளும் ஒரு சில நாட்களில் நெல் சேமிப்பு நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, கோட்டாட்சியர் ஏழுமலை, மண்டல மேலாளர் குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**